# நமது அம்மாக்களின் விசுவாசம்

***எனது அம்மா எலிசபெத் ஏ போர்ட்டரின் வாழ்க்கை***

*“அன்பு மற்றும் பிரார்த்தனையின் எளிமையான வடிவம்”*





**(எலிசபெத் ஏ.போர்ட்டர் பிப்ரவரி 24, 1945 - பிப்ரவரி 18, 2022)**

**“நமது அம்மாக்களின் விசுவாசம்”** என்ற காலத்தை வென்ற ஒரு பழைய பாடல் இருக்கிறது. இதை அமெரிக்க சபையின் மதகுருவான ஆர்தர் பி.பேட்டன் (1864-1952) 1920 வாக்கில் எழுதியிருக்கிறார். அது எழுதப்பட்ட காலத்திற்கு பிறகு இந்த பாடல் இதுவரை 39 துதிப்பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

இந்த துதிப்பாடலில் முதல் சரணம் இப்படி தொடங்குகிறது:

*நமது அம்மாக்களின் விசுவாசம்,*
*தாலாட்டு பாடல்களிலும், தூங்கும் நேர*
*பிரார்த்தனைகளிலும் இன்னும் வாழ்கிறது.*

*குழந்தைகளுக்கான கதைகளிலும்,*
*மனமார்ந்த அன்பிலும்,*
*உனது இருப்பு இன்னும் காற்றெங்கும் கமழ்கிறது*
*நமது அம்மாக்களின் விசுவாசம், நிலையான விசுவாசம்!*
*நாம் சாகும் வரையில் கர்த்தரில் விசுவாசமாக இருப்போம்.*

இந்த பாடல் எனது அழகான அம்மா **எலிசபெத் ஏ போர்ட்டரை** விவரிக்கிறது.

அந்த நாள் எனக்கு மிகவும் நினைவிருக்கிறது. பிப்ரவரி 18 2022 நள்ளிரவு 12:30 க்கு என் தந்தை என்னை தொலைபேசியில் அழைத்தார். எனது தகப்பனார் அந்த சமயங்களில் கூப்பிடுபவர் அல்ல என்பதால் மிகுந்த அச்சத்துடன் போனை எடுத்தேன். எனது தந்தையுடன் அலைபேசியில் பேசிய அந்த 35 வினாடிகள் என் வாழ்க்கையையே புரட்டிப்போடப்போகிறது என்பது எனக்கு அப்போது தெரியாது.

**"உனது அம்மாவால் சுவாசிக்க முடியவில்லை ஸ்டீவ், அவருக்காக ஜெபம் செய்!"** என்று பதற்றமான நடுங்கும் குரலில் அவர் சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டார். சில நிமிடங்களில் நானும் என் சகோதரியும் அவருக்கு அழைத்து அப்போது அம்மாவுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த ஓஹியோ அண்டோவரை சேர்த்த மருத்துவ உதவியாளரிடம் எப்படியாவது அம்மாவை காப்பாற்றிவிடச்சொல்லி கேட்டோம். அவர்கள் தீவிரமாக முயற்சி செய்துக்கொண்டிருந்தது என் காதுகளில் கேட்டது. எப்படியாவது காப்பாற்றும்படி தேவனை மன்றாடிக் கேட்டுக்கொண்டிருந்தேன். 5 நிமிடங்களுக்குப் பிறகு அவரது உயிர் உடலை விட்டு பிரிந்துவிட்டது. அவர் இறந்துவிட்டார், நான் நொறுங்கிப்போனேன். நியூயார்க்கிலிருந்த

எனது வீட்டிலிருந்து அந்த கடுமையான பனிப்புயல் வேளையிலும் எனது தந்தைக்கு ஆறுதலாக இருப்பதற்காக ஓஹியோ விரைந்தேன். வழக்கமாக 3.5 மணி நேரத்தில் போய்விடமுடியும் என்றாலும் பனி நிறைந்த சாலைகள் காரணமாக அன்று 8 மணி நேரங்கள் ஆகின.

அடுத்த சில நாட்களுக்கு எனது அன்பு அம்மாவின் திடீர் இறப்பின் காரணமாக நாங்கள் அனைவரும் அவர்களது இல்லத்தில் தங்கினோம். என் தந்தையை சுற்றி அனைவரும் மிகுந்த அன்புடனும் ஆதரவுடனும் சூழ்ந்திருந்தோம். பிப்ரவரி 18, 2022 அன்று ஓஹியோ அண்டோவரில் உள்ள பம்கார்ட்னர் ஃபினரல் ஹோமில் அன்னையின் உடலுக்கு இறுதி சடங்குகள் செய்வதற்காக சென்றோம். அந்த மாலைவேளையில் அன்பு, அணைப்பு மற்றும் கண்ணீரை பகிர்ந்து கொண்டோம். அந்த சவப்பெட்டியில் எனது அன்னை கிடத்தப்பட்டிருப்பதாக நாங்கள் பார்க்கவில்லை, அவர் மீண்டும் இயேசுவிடம் செல்கிறார் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம்! அவரைச்சுற்றிலும் குடும்ப உறுப்பினர்கள் நின்றிருந்தனர். அவரது பெலவீனங்கள் அனைத்தும் குணமாகி முழுமையாக இருப்பார்கள். வலி இல்லை, கஷ்டங்கள் இல்லை. அவருக்கு இப்போது புதிய உடல் கிடைத்திருக்கும்.

அம்மா பரலோகத்தின் கதவு வழியாகச் சென்றபோது, ஐம்பத்து மூன்று வருடங்களாகப் பார்க்காத தன் அன்பான அப்பாவைப் பார்த்து இருப்பார்கள். என் அம்மா சிறுவயதில் இருக்கும்போது அவர்கள் மிகவும் அன்பானவர்களாக இருந்தார்கள். அவரது வாழ்நாள் முழுவதும் அவரை மீண்டும் பார்த்து விட மாட்டோமா என்ற ஏக்கம் அவரிடம் இருந்தது. அவர் இறக்கும் போது அவர்களுக்கு இருபத்தி நான்கு வயது. என் வாழ்நாள் முழுவதும் அவர்கள் அவரைப் பற்றி பலமுறை பேசியிருக்கிறார்கள். அவரது தந்தை மட்டுமல்ல 2007 ஆம் ஆண்டில் இறந்த அவரது அன்பான தாயும், அவரது உடன்பிறந்தவர்களான எலன் மற்றும் ஜானி ஆகியோரும், மேலும் சில குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சில நண்பர்களும் கூட அவரது பரலோக வருகைக்காகக் காத்திருந்தனர். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அம்மா இறுதியாக தனது அழகான இரட்சகராகிய இயேசுவை நேருக்கு நேர் பார்த்து

இருப்பார்கள். பரலோகத்தில் முதன்முறையாக அவர் முன் குனிந்து, தேவனைக் கண்ட பரவசம் மற்றும் பொங்கிப் பெருகும் அன்பினால் உணர்ச்சிப்பெருக்கில் அவர்கள் அழுது இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அவள் “ஓ இயேசுவே, இயேசுவே!” என்று கூக்குரலிடுவதை நான் என் என் ஆவியில் கேட்க முடிந்தது. அந்த எண்ணமே அவளின் திடீர் மறைவை எதிர்கொள்வதற்கு எங்கள் அனைவருக்கும் பெரும் ஆறுதலாக இருந்தது.

நான் என் தாயை மிகவும் நேசித்தேன் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும், மேலும் அவர் எவ்வளவு சிறப்பு வாய்ந்தவர் என்பதை உலகம் அறிய வேண்டும் என்று விரும்புகிறேன். அவர் மிகவும் பணிவான பெண்மணி, அவர் தனது முழு குடும்பத்திற்கும் மரபான மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தை விட்டுச் சென்றார், அதை தெரிந்து கொள்வது இயேசுவை நம்புபவர்களுக்கு ஊக்கத்தை கொடுக்கும் என்று நான் நினைக்கிறேன். அவளுடைய சிறப்பு வாய்ந்த கதையை இங்கே பார்க்கலாம்.

***எலிசபெத் போர்ட்டர் “அன்பு மற்றும் பிரார்த்தனையின் எளிமையான வடிவம்”***

---



## ஆரம்ப ஆண்டுகள்

எலிசபெத் ஆன் போர்ட்டர் பிப்ரவரி 24, 1945 இல் ரெவ். யோஸ்ட் ஜே. பைலர் (ஏப்ரல் 30, 1917 - பிப்ரவரி 22, 1969) மற்றும் மேரி ஆன் மில்லர் பைலர் (மார்ச் 23, 1920 - 2007) ஆகியோரின் மகளாக ஓஹியோவின் ஹன்ட்ஸ்பர்க்கில் பிறந்தார்.

எனது தாத்தா பாட்டி பழைய ஏற்பாடு அமிஷ் தேவாலயத்தில் பிறந்தவர்கள் கடவுளின் கிருபை அவர்களின் வாழ்க்கையின் திசையை முற்றிலுமாக மாற்றும் வரை அங்கேயே இருந்தார்கள். யோஸ்ட் பைலர் 1737 இல் சுவிட்சர்லாந்தில் இருந்து குடிபெயர்ந்தவரான ஜேக்கப் பைலரின் நேரடி வழித்தோன்றல் ஆவார். ஜேக்கப் அந்த ஆண்டு அக்டோபரில் பிலடெல்பியா, PAக்கு வந்திருக்கிறார். அவரது மகன், ஹன்னாஸ், மிஃப்லின் கவுண்டி, PA இல் குடியேறினார், அவர் தான் பிக் வேலியின் முதல் பேராயராக இருந்தவர். பிற்காலத்தில் அவரது சில குடும்ப உறுப்பினர்கள் ஓஹியோவின் லாரன்ஸ் கவுண்டிக்கு குடிபெயர்ந்தனர். 1887 ஆம் வருடத்தின் வசந்த காலத்தில், என்

தாத்தாவின் வாரிசுகள் கியூகா கவுண்டியில் உள்ள மிடில்ஃபீல்ட், ஓஹியோ பகுதியில் குடியேறினர்.

என் பாட்டியின் மூதாதையர்கள் சுவிட்சர்லாந்தில் இருந்து குடிபெயர்ந்து இறுதியில் 1814ஆம் ஆண்டு வால்நட் க்ரீக்கின் தென்மேற்கே உள்ள சோமர்செட் கவுண்டி, PA மற்றும் ஹோம்ஸ் கவுண்டி, ஓஹியோ ஆகிய பகுதிகளில் உள்ள பல இடங்களில் குடியேறினர். என் பாட்டி ஓஹியோவின் எம்டி ஹோப்பில் வளர்ந்தார், பிறகு ஓஹியோவின் மிடில்ஃபீல்டுக்கு வந்தார். எனது தாத்தா மற்றும் பாட்டி மார்ச் 27, 1941 இல் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு ஐந்து குழந்தைகள், ஒரு குழந்தை இறந்து பிறந்தது. எலன், எலிசபெத் ஆன், ஜான் மற்றும் மேரி லூ ஆகியவை மற்றவர்களின் பெயர்கள்.

நான் எங்கள் குடும்ப வரலாற்றைப் படித்தபோது, எத்தனை அமிஷ் பிஷப்கள் என் தாயின் குடும்ப வரிசையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டேன். விவசாயியான என் தாத்தா யோஸ்ட் பைலர் அவரது குடும்பத்தை ஒரு பண்ணையில் வைத்து பராமரித்தார். எனது தாத்தா பாட்டி 1940-களின் பிற்பகுதி வரை அமிஷ் தேவாலயத்தில் இருந்தார்கள். அவர்களது குழுவில் அவர்கள் இரட்சிக்கப்பட்டு அமிஷை விட்டு வெளியேறியவர்கள்.

கடவுளின் கிருபையால் மேரி ஹோஸ்டெட்லர் என்ற அன்பான பெண் எனது தாத்தாவின் பண்ணை வழியாக செல்லும் போது என் தாத்தாவிடம் இரட்சிப்பின் அவசியத்தைப் பற்றி நம்பிக்கையுடன் பேசுவார். ஆனால் எனது தாத்தா அதை விரும்பாமல் மேரியை பணிவுடன் வெளியேறச் சொல்வார், ஆனால் மேரியின் பொறுமையாலும் விடாமுயற்சியாலும் இறுதியில் எனது தாத்தா தனது இதயத்தை இறைவனிடம் கொடுத்தபோது மேரியின் முயற்சிகளுக்கு பலன் கிடைத்தது. ஒரு முழு குடும்பத்தையும் காப்பாற்றி மாற்றியமைத்த கடவுளின் இந்த அற்புதமான செயலைப்

பற்றி என் அம்மா அடிக்கடி வியந்து பேசுவார். அவர்களது அமிஷ் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் ஆதரவின்றி, அவர்கள் பர்டன், ஓஹியோவில் உள்ள மேப்பிள் வியூ மென்னோனைட் தேவாலயத்தில் சேர்ந்தனர், அங்கு அவர்கள் 1957-வரை நம்பிக்கையுடன் கலந்துகொண்டனர். அம்மா அந்த காலக்கட்டத்தில் நடந்த ஒரு கதையை பகிர்ந்து கொண்டார், அது இன்னும் என் நினைவில் இருக்கிறது.

ஒரு நாள் தேவாலயத்தில் பாதிரியார் எனது அம்மாவின் தந்தையை புதன்கிழமை இரவு ஆராதனையில் பேசச் சொல்லியிருக்கிறார் --அவர் பிரசங்க மேடையில் பேசுவது அதுவே முதல் முறை. அவர் எழுந்து, தான் ஆயத்தம்பண்ண வேத பகுதியை வாசித்துவிட்டு மீதமிருந்த முப்பது நிமிட கூட்டத்தில் மௌனமாக நின்றார். அம்மா இந்த கதையை குறிப்பிட்டார்கள் ஏனென்றால் பின்னர் கடவுள் அவரை ஊழியத்திற்கு அழைத்தபோது அவர்கள் அபிஷேகத்துடன் பேசியிருக்கிறார். அம்மா எப்போதும், “அபிஷேகம் என்ன மாற்றத்தை செய்யும்!” என்று சொல்வார்கள். அப்போதிருந்து, கடவுள் எனது அம்மாவின் பெற்றோரை அமிஷிலிருந்து மென்னோனைட் வரை ஒரு சக்திவாய்ந்த செயல்முறையின் மூலம் அழைத்துச் சென்றார், பின்னர் இறுதியில் பரிசுத்த ஆவியால் அவர்களை நிரப்பினார். மீண்டும் மீண்டும், அம்மா சொல்வார், "நாங்கள் அமிஷை விட்டு வெளியேறியது ஒரு அதிசயம்."

அம்மா 1953 இல் நடந்த மற்றொரு கதையை நினைவுகூர்ந்தார், அவர்களைப் பற்றி யாருக்கும் அறிமுகம் இல்லாத ஒரு மறுமலர்ச்சி கூட்டத்தில் அவரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர். அந்த நகரம் வழியாக சென்று கொண்டிருந்த ஒரு பயண சுவிசேஷகர் அன்று மாலை ஊழியம் செய்தார். அவர்கள் என் தாத்தா பாட்டியை அதற்கு முன் சந்தித்ததில்லை, திடீரென்று பிரசங்கத்தை பாதியில் நிறுத்தி என் தாத்தா பாட்டியிடம் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார்கள். மூன்று மறக்கமுடியாத விஷயங்களைச் சொன்னார்கள்: முதலாவது, அன்று அவர்களின் நாய் சாலையில் கார் மோதியதால் இறந்துவிட்டது.

இரண்டாவது அவர் என் பாட்டியின் பணப்பையின் உள்ளே என்னென்ன இருக்கிறது என்று சரியாக விவரித்தார், மூன்றாவதாக, என் பாட்டி கர்ப்பமாக இருப்பதை வெளிப்படுத்தினார் (அது பெண் குழந்தை அதாவது என் அத்தை மேரி). அவர் அனைத்தையும் 100% துல்லியமாக சொல்லியதை பார்த்து என் அம்மாவின் குடும்பம் ஆச்சரியத்தில் மூழ்கியிருக்கிறார்கள். கடவுள் தன் கிருபையை வெளிப்படுத்தினார்.

1950-களின் பிற்பகுதியில், மென்னோனைட்டுகள் மத்தியில் மறுமலர்ச்சி பரவலாக பரவியது. ஜெரால்ட் டெர்ஸ்டின் தனது கூடாரத்துடன் ஓஹியோவின் பர்ட்டனுக்கு வந்தார். அவர் சரசோட்டா புளோரிடாவில் உள்ள நற்செய்தி சிலுவைப் போர் குழுவை சேர்ந்தவர். அந்தக் கூடாரக் கூட்டங்களில் என் தாத்தா கர்த்தரால் ஆழமாகத் தொடப்பட்டதுடன் நற்செய்தியைப் பிரசங்கிக்க தேவனின் அழைப்பைப் பெற்றார். அத்தகைய கூட்டம் ஒன்றில் அவர் ஆவியால் ஆழமாகத் தொடப்பட்டார். கூடாரக் கூட்டங்களுக்குப் பிறகு ஓரிரு உள்ளூர் குடும்பங்களுக்கு இடையே அதிக மறுமலர்ச்சி ஏற்பட்டது, அவர்கள் கிளாரிடான், ஓஹியோவில் கிளாரிடான் மறுமலர்ச்சி மையம் என்று அழைக்கப்படும் ஒரு சிறிய தேவாலயத்தைத் தொடங்கினர். பெந்தெகொஸ்தே அவர்களுக்கு புதியது, கடவுள் மீது மிக ஆர்வமாக இருந்ததால் அவர்கள் மிக நீண்ட காலமாக வாரத்தின் ஒவ்வொரு இரவும் தேவாலயத்திற்கு சென்று கொண்டிருந்தனர். அவர்கள் கடவுளின் உள்ளார்ந்த விசயங்களில் நாட்டம் கொண்டிருந்தார்கள்.

சில காலத்திற்கு பிறகு யோஸ்ட் பைலர் தேவாலயத்தின் போதகராக தேர்ந்தெடுக்கப்பட்டார், அங்கு சபை அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு கூடியது. அந்தக் கட்டிடத்தில்தான் என் அம்மா தனது வாலிப வயதில் ஞாயிறு பள்ளியில் கற்பித்தார். குழந்தைகளுக்கு கற்பிக்கவும், மக்களை நேசிக்கவும் அவளுக்கு ஒரு சிறந்த அபிஷேகம் இருந்தது. **1966-ஆம் ஆண்டில் அவர்கள் ஓஹியோவின் மிடில்ஃபீல்டில் உள்ள 14662 ஓல்ட் ஸ்டேட் ரோட்டில் மற்றொரு தேவாலயக் கட்டிடத்தைக் கட்டி, மிடில்ஃபீல்ட் மறுமலர்ச்சி மையம் என்று மறுபெயரிட்டனர்.**

எனது தாத்தா பிப்ரவரி 22, 1969 வரை தேவாலயத்தில் போதித்தார், அவர் தனது ஐம்பத்திரண்டாவது வயதில் இறந்தார். அவரை அன்பின் போதகர் என்று யாவரும் அழைத்தார்கள். அவர் தேவாலயத்திற்கு அருகில் வாழ்ந்தார். யாராவது பார்க்க வரும்போதெல்லாம், அவர் பைபிளை மடியில் வைத்துக்கொண்டு ஜெபத்தில் ஆழ்ந்திருப்பார் என்று சொல்வார்கள். அவர் அனைவரையும் நேசித்தார், பரிசுத்த ஆவி அவரை ஆட்கொண்ட போது, அவர் பீடங்களுக்குப் பின்னால் நடந்துகொண்டு பிரசங்கித்தார்! என் பாட்டி எனக்கு தாத்தாவின் பைபிளைக் கொடுத்தார்கள், அது பல ஆண்டுகளான மிகவும் அன்பாகப் பயன்படுத்தப்பட்டு நிறைய குறிப்புகள் எடுக்கப்பட்டு கிழிந்த நிலையில் மிக மோசமாக இருந்தது.



பிறகு என் அப்பா ஒரு பரஸ்பர நண்பர் மூலம் என் அம்மாவை சந்தித்த போது அவர் சுவையான ஆப்பிள் பை செய்து கொடுத்திருக்கிறார் அதில் ஒரு துண்டை சுவைத்து பார்த்த அப்பா மிக சுவையாக பேக் செய்யக்கூடிய பெண்ணை சந்தித்து விட்டதை உணர்ந்திருக்கிறார்.

அவள் ஈஸ்ட் கிளேர்டனில் உள்ள பழைய தேவாலயத்தில் இருந்தபோது அவர்கள் டேட்டிங் செய்து, செப்டம்பர் 17, 1966 இல் திருமணம் செய்துகொண்டார்கள். அவளுடைய அப்பா அதாவது என் தாத்தா மரணப் படுக்கையில் இருந்தபோது, ஓஹியோவின் மிடில்ஃபீல்டில் பழைய ஸ்டேட் ரோட்டில் உள்ள புதிய தேவாலயத்தை என் பெற்றோரிடம் எடுத்துக் கொள்ளும்படி அவர் கேட்டுக் கொண்டார். அங்கு அவர்கள் மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்தார்கள்.

அந்த தேவாலயத்தில்தான் என் அம்மா முதன்முறையாக ஒரு போதகரின் மனைவியானார். கர்த்தர் என் பெற்றோரை வேறு பகுதிக்கு அழைத்துக் கொண்ட பின், சில ஆண்டுகளுக்குப் பிறகு தேவாலயம் "வளமான வாழ்க்கை தேவாலயமாக" மாறியது. இந்த அழகான தேவாலயம் இன்றும் உள்ளது. சமீபத்தில் கடவுளின் விலைமதிப்பற்ற அருளையும் அபரிதமான வளர்ச்சியையும் கண்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்களின் பாரம்பரிய தினத்தில் அங்கு பிரசங்கம் செய்ததை நான் பெருமையாகக் எண்ணுகிறேன். கதவுக்கு வெளியே அதன் நிறுவனர் என் தாத்தா யோஸ்ட் பைலரின் நினைவாக ஒரு பெயர்ப்பலகை இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்தேன்.

என் அம்மாவுக்கு ஏப்ரல் 26, 1971 அன்று பெயின்ஸ்வில்லி, ஓஹியோ மருத்துவமனையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. என் சகோதரி ஸ்டேசி முதலில் பிறந்தார், நான் மூன்று நிமிடங்கள் கழித்து பிறந்தேன். என் பெற்றோர் எங்களை ஓஹியோவின் கிழக்கு க்ளேர்டன் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். நான்கு வருடங்களுக்குப் பிறகு நாங்கள் பன்னிரண்டு மைல் தூரம் தள்ளி மெசபடோமியா, ஓஹியோவுக்குக் குடிபெயர்ந்தோம். எங்களுக்கு ஐந்து வயதான போது நாங்கள் மேற்கு வர்ஜீனியாவிலும் பின்னர் சில காலம் கனெக்டிகட்டிலும் வாழ்ந்தோம். எனது பெற்றோர் சார்டன் ஓஹியோவில் பதினைந்து ஆண்டுகளும் மற்றும் மேடிசன், ஓஹியோவில் பத்து ஆண்டுகளும் வாழ்ந்தனர். இறுதியாக அவர்கள்

ஓஹியோவின் அன்டோவரில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக என் அன்பான அம்மா மறையும் வரை வாழ்ந்தனர்.

எனது பெற்றோர் தங்களுடைய முப்பது வருட ஊழியத்தில் சக்திவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். எனது தந்தையின் பிரசங்கங்களை எங்கள் இணையதளத்தில் காணலாம். பல ஆண்டுகளாக அவர்கள் மற்ற தேவாலயங்களுக்கும் பல்வேறு தலைமைப் பாத்திரங்களில் உதவினார்கள். என் அம்மா அமைப்பை நிர்வகிப்பதில் திறமையானவர், அதை அவர் இறக்கும் வரை அழகாகப் செய்தார்கள். உண்மையில், அவர்கள் தொட்ட அனைத்தும் நம்பமுடியாத அளவிற்கு சிறப்பாக நடந்துள்ளன.

## அம்மாவும் அவரது எப்போதும் நீடித்திருக்கும் மரபும்

என் அம்மா எவ்வளவு சிறப்பாக இரட்டைக் குழந்தைகளை வளர்த்தார்கள் என்பது எனக்கு இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது. அது அவரை ஒழுங்கமைக்கப்பட்டவராக மாறவும் எப்போதும் தன் குடும்பத்தை முதன்மைப்படுத்தவும் உதவியது; அவர்கள் எங்களுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தார்கள், அவர்கள் நன்கு சமைப்பார்கள்,சுத்தம் செய்வார்கள், பேக் பண்ணுவார்கள் மேலும் தையல், இன்னும் பல விஷயங்களை மிக அழகாக செய்வார்கள். அவர் ஒரு அற்புதமான சமையல்காரர் மற்றும் பேக்கர், நான் இன்னும் அவரது சுவையான உணவை எண்ணி ஏக்கம் கொள்கிறேன். அமிஷிடமிருந்து வந்து, வளரும் போது பக்கத்து வீட்டில் வசித்த பாட்டி ஹெர்ஷ்பெர்கரிடம் இருந்து நிறைய கற்றுக்கொண்டார்கள். அவர் அடிக்கடி பாட்டியின் வீட்டுக்குச் சென்று அவர்களுக்கு பணிவிடை செய்வதையும், அவர்களை கவனித்துக் கொள்வதையும் அன்புடன் செய்தார்கள்.

அம்மாவின் இளமை பருவத்தில் அவரது பாட்டி ஒரு அற்புதமான வழிகாட்டியாக இருந்தார். பாட்டி எந்தளவுக்கு தனக்கு விசயங்களை கற்றுக்கொடுத்தார் என்பதைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டு பேசியிருக்கிறார். உண்மையில், என் அம்மா சமைக்கும் போதும் பேக் செய்யும் போதும் எல்லோருடைய கவனமும் அவர் மீது குவியும்! பல ஆண்டுகளாக எங்கள் தேவாலயத்திற்கு வந்த மிஷனரிகள் மற்றும் போதகர்கள் எங்கள் வீட்டில் தங்குவதை விரும்பினார்கள். அதன் மூலம் என் அம்மா கையால் சாப்பிட முடியும் என்பது தான் காரணம். அவள் தயாரிக்கும் உணவு பதார்த்தங்கள் பற்றி ஊர் முழுக்க பேச்சாக இருக்கும். அவர் எங்களை நன்றாக கவனித்து வளர்த்ததற்கு நான் நன்றியுள்ளவனாக இருந்தேன். பணம் குறைவாக இருந்தபோதும், அவள் ஒவ்வொரு பைசாவுக்கும் பட்ஜெட் போட்டு ஒவ்வொரு டாலரையும் மிக லாவகமாக திட்டமிடுவார். அவரது நிதி மேலாண்மை மற்றும் அமைப்பை நிர்வகிக்கும் திறமை பற்றி என் அப்பா ஆச்சரியப்படுவார். அம்மா உண்மையிலேயே என் அப்பாவுக்கு

நீதிமொழிகள் 31-படி அமைந்த மனைவியாகவும், எங்களது குடும்பத்திற்கு நல்ல தாயாகவும் இருந்தார்.

என் இளமைக்காலத்தில் ஒரு நாள், சிறிதளவு மட்டுமே திறந்திருந்த அவருடைய அறைக்கதவைத் தாண்டி நான் கடந்து சென்றேன். அவர் தன் முன் தன் பைபிளுடன் மண்டியிட்டு பரிந்து கண்ணீருடன் அழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் என் அப்பாவுக்காகவும், என் சகோதரி மற்றும் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்காகவும் அவர்களது பெயரைச் சொல்லி பிரார்த்தனை செய்தார். பிரார்த்தனையில் அவளது தீவிரமும் ஆர்வமும் என் கவனத்தை ஈர்த்தது. என் வாழ்க்கையின் மீது கடவுளின் உதவி கிடைப்பதற்காக அவள் கூக்குரலிட்டதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். அவர்களுடைய பிரார்த்தனைகள்தான் இன்றுவரை வாழ்க்கையின் எல்லா ஏற்ற தாழ்வுகளிலும் என்னைத் தாங்கியது என்று எனக்குத் தெரியும். அவர்களுடைய பிரார்த்தனை என்னைத் தாங்கி, என்னுடைய அழைப்பிற்குள் கொண்டு வந்தது. என் அன்பான அம்மா இல்லையென்றால் இன்று நான் இந்த நிலையில் இருந்திருக்க மாட்டேன்.

ஒரு நாள் அவர் அறைக்குள் நுழைந்து, பைபிளை எடுத்துக்கொண்டு படுக்கையில் அமர்ந்தேன். நான் அதைத் திறந்து பார்த்தேன், எல்லா பக்கங்களிலும் குறிக்கப்பட்டு எல்லா இடங்களிலும் குறிப்புகள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன், புத்தகத்தின் பக்கங்களில் இருந்த கண்ணீர் கறைகள் எனக்குள் ஆழ்ந்த உணர்வுகளை ஏற்படுத்தின. கடவுளுடைய கட்டளையின் மீது அவர்கள் கொண்டிருந்த ஆழமான அன்பை என்னால் மறக்கவே முடியாது. அவர் மண்டியிட்டு படுக்கையில் சாய்ந்து ஜெபம் செய்வதையும் பைபிளைப் படிப்பதையும் நான் இன்னும் நினைத்துப் பார்க்கிறேன். ஒவ்வொரு சனிக்கிழமை மாலையும் புனிதமானது; அம்மா மாலை முழுவதும் மறுநாள் நடக்கும் தேவாலய காரியங்களுக்காக ஜெபம் செய்வார்கள் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை காலையில் அம்மா தீர்க்கதரிசனம் சொல்வார், மேலும் தேவாலயத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் கடவுளே பேசுகிறார் என்று நினைக்கும் அளவுக்கு அவரது அருள்வாக்கு மிகவும் வலுவாக

இருந்தது என்று என்னால் சொல்ல முடியும். அவர் தன் கைகளை உயர்த்தி கன்னங்களில் கண்ணீர் வழிய பேசும் கடவுளின் சொற்கள் மக்களை தொடுவது எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. பரிசுத்த ஆவியின் அருளால் அவர் இயங்கினார் என்பதை மறுக்க முடியாது

1986-ல், நான் ஆப்பிரிக்காவில் இருந்தபோது மிகவும் நோய்வாய்ப்பட்டு கிட்டத்தட்ட இறக்கும் தருவாய்க்கு சென்றேன். காட்டில் ஒரு சிறிய குடிசையில் ஒரு மூங்கில் கட்டிலில் படுத்திருந்தேன், என் வாழ்க்கை உண்மையில் விளிம்பில் தொங்கிக்கொண்டிருந்தது. நாங்கள் ஜாம்பியாவின் அடர்ந்த கானகத்தின் நடுவே இருந்ததால் வீட்டை தொடர்பு கொள்ள முடியாது. திடீரென நள்ளிரவில் இறைவன், அவர்களை எழுப்பி "ஸ்டீவ்க்காக ஜெபம் செய்" என்றார். அவர் உடனடியாக படுக்கையில் இருந்து எழுந்து, மண்டியிட்டு தொடர்ந்து ஐந்து மணி நேரங்கள் ஜெபம் செய்தார். கடவுளின் உன்னத சக்தியால், அந்த தொலைதூர தேசத்தில் நான் திடீரென்று குணமடைந்தது அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. நான் வீட்டிற்கு வந்த பிறகு நாங்கள் தின குறிப்பை ஒப்பிட்டுப் பார்த்தபோது, அந்த நிகழ்வு நடந்த நேரத்தை பார்த்து நாங்கள் திகைத்துப் போனோம். என் வாழ்க்கை விளிம்பில் தொங்கிக்கொண்டிருந்த அதே நேரத்தில் அவர்களுடைய பிரார்த்தனை என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது. அதே தீவிரமான பிரார்த்தனைகள் தான் என் உயிரை பல முறை காப்பாற்றியிருக்கிறது. அம்மாவின் பிரார்த்தனை என்னைக் குணப்படுத்தியது, காப்பாற்றியது, மீட்டெடுத்தது, மீண்டும் மீண்டும் என் வாழ்க்கையை சரியான பாதைக்கு கொண்டு வந்தது.

நான் வளரும் காலங்களில் பல போராட்டங்களை எதிர்க்கொண்டேன் மற்றும் பள்ளியில் பல நேரங்களில் நிராகரிப்புகளை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. என் அம்மா என்னை அழைத்து என்னிடம் என் வாழ்க்கையைப் பற்றி பேசும்போது நான் மிக தாழ்ந்த நிலையில் உற்சாகமிழந்து இருந்தேன். உயர்நிலைப் பள்ளி பயிலும் போது அம்மா எனக்கு வீட்டுக் கல்வி அளித்தார்கள். ஒவ்வொரு நாளும் கடவுளின் வார்த்தையை என் வாழ்வின் மேல் வைத்து பிரார்த்தனை

செய்தார்கள். என் நம்பிக்கையற்ற எதிர்காலத்தைப் பற்றி "நான் எதற்கும் உதவாதவன், என்னால் எதையும் கற்றுக்கொள்ள முடியாது!" அல்லது "நான் ஒன்றுமில்லை!" நான் சொன்னேன், ஆனால் அம்மா, “உனக்கு பலம் தருகிற கிறிஸ்துவின் மூலம் எல்லா காரியங்களையும் செய்ய முடியும்!” அல்லது "நீ ஒரு வெற்றியாளரை விட எந்தவிதத்திலும் குறைந்தவன் இல்லை” என்றெல்லாம் தன்னம்பிக்கை ஊட்டுவார். அவருடைய தொடர்ச்சியான உறுதிமொழியும் ஊக்கமும்தான் என் வாழ்க்கையின் போக்கை அமைத்தது மற்றும் காயமடைந்த என் ஆன்மாவை குணப்படுத்தியது. என் வாழ்க்கையின் ஒவ்வொரு வீழ்ச்சியின் போதும் அவர் பிரார்த்தனை செய்து என்னை முழுமையாக்கவும் மற்றும் குணமாக்கவும் உதவினார். என் அம்மாவுக்காக நான் தேவனை போற்றுகிறேன். தாயின் பிரார்த்தனைக்குப் பதில் கிடைக்காமல் போகாது! அதற்கு நானே வாழும் ஆதாரம்!

நான் வளர்ந்த போது அவர்களைப் பார்த்து கற்றுக்கொள்ள என் அம்மா ஒரு அற்புதமான உதாரணமாக இருந்தார். அவர் உண்மையிலேயே ஒரு நேர்மையான பெண். என் அம்மா பொய்யோ சாபமோ சொன்னதை ஒரு முறை கூட நான் கேட்டதில்லை. உலகத்தில் அனைவரையும் போல அவரையும் குறைகளே இல்லாதவர் என்று சொல்ல முடியாது, ஆனால் அவர் அதை எப்போதும் ஒப்புக்கொள்ள தயங்கமாட்டார். தன் வாழ்நாளில் பலவற்றை இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடியும் என்று அவர் அடிக்கடி சொல்வார். வாழ்க்கையின் ஏற்ற தாழ்வுகள் அனைத்திலும் தான் கற்றுக்கொண்டதை அடிக்கடி பகிர்ந்துகொண்டார்கள். அப்படியிருந்தும், அவர் இயேசுவைப் போல இருக்க முயற்சி செய்தார், அவர் கடவுளிடம் மிகுந்த பயபக்தியைக் கொண்டிருந்ததுடன் தன் வாழ்க்கை முழுவதும் தேவன் மீது அளவிலா பிரியத்தை கொண்டிருந்தார். அவருடைய தந்தை யோஸ்ட் பைலர் தனது வாழ்க்கையில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தினார், அதன் மூலம் அவர் என்னவாக மாறினார் என்பதைப் பற்றி அடிக்கடி பேசுவார்.

என் அம்மாவின் வாழ்க்கையில் பிற்காலத்தில், அவர் எனக்கு மட்டுமல்ல, அவரது முழு குடும்பத்திற்காகவும் தொடர்ந்து பிரார்த்தனை செய்து ஊக்கப்படுத்தினார். ஒவ்வொருவரும் என் அம்மாவுக்கு விசேஷமானவர்கள் - ஒவ்வொரு மருமகளும் ஒவ்வொரு மருமகனும் அவர்களின் குழந்தைகள் அனைவரும். மேலும் தனது பேரக்குழந்தைகளை ஆழமாக நேசித்தார். அவர்களுடைய படங்கள் அவருடைய வீட்டின் எல்லா இடங்களிலும் இருக்கின்றன; அவர்கள் எழுதிய ஒவ்வொரு குறிப்பையும் வாழ்த்து அட்டைகளையும் வைத்திருந்தார். என் வாழ்நாள் முழுவதும் எனக்கு செய்ததைப் போலவே அவரது ஜெபத்தில் அவர்களையும் உள்ளடக்குவார். அதனால் அவர்கள் இயேசுவைச் சேவிப்பார்கள், நேசிப்பார்கள், கடவுளின் பரிபூரண சித்தம் அவர்களுடைய வாழ்க்கையில் நிறைவேறும். அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களின் பிறந்தநாளை அவர் ஒருபோதும் மறந்ததில்லை, தேவை ஏற்படும் போதெல்லாம் வாழ்த்து அட்டைகள் அல்லது குறிப்புகளை எழுதுவார். அவரது முதுகு மற்றும் கால்களில் வலியால் அவதிப்பட்டபோதும், அவர் அழைப்புகள் மேற்கொள்ளவோ அல்லது துன்பத்தில் இருக்கும் மற்றவர்களைப் பார்க்க நேரம் எடுக்கவோ தவறியதில்லை.

காலப்போக்கில், அம்மா பலரை இறைவனிடம் நெருங்கும்படி செய்தார்கள், மேலும் அவர் எப்போதும் சொல்வார், "மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது மிகவும் நன்றாக இருக்கிறது." அவர் வறுமையில் வாடும் தேவாலய மக்களை ஷாப்பிங் செய்ய அழைத்துச் சென்று அவர்களுக்கு ஆடைகளை வாங்கியது மற்றும் வீடற்ற ஒருவரை அழைத்து வந்து எங்கள் சாப்பாட்டு மேசையில் அவருக்கு உணவளித்தது எனக்கு நினைவிருக்கிறது. பிற்பாடு அம்மா அவரை நீண்ட காலத்துக்கு கவனித்து, மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வர உதவினார்.

அம்மா இளைஞர்களுடன் நேரத்தை செலவிட விரும்பினார். எங்கள் தேவாலயத்தில் இளைஞர் நிகழ்ச்சிகள் மூலம் இளம் பெண்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த ஆயிரக்கணக்கான மணிநேரங்களை அவர் செலவிட்டார். அவர்கள் வேதத்தை மனப்பாடம்

செய்து, அவர்களின் அனைத்து பைபிள் வகுப்பு வேலைகளையும் முடிக்க உதவினார். தேவாலயத்திலிருந்து வெளியேற நினைத்த பெண்களுடன் நின்று அவர்களின் அனைத்து தேவாலய திட்டம்களையும் முடிக்க உதவினார். அம்மா தனது அன்பினாலும் வழிகாட்டுதலினாலும் எத்தனை குழந்தைகளைத் தொட்டாள் என்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. அம்மா ஒரு ஆலோசகராக பல வகுப்புகளை எடுத்தார், மேலும் நெருக்கடியான கர்ப்ப மையத்தில் உதவினார். அவர் மற்றவர்களிடம் ஆழ்ந்த பரிவு கொண்டிருந்தார். அவர் தேவாலய நாடகங்களை வழிநடத்துவார், இதற்காக தனது வாழ்க்கையின் பல மாதங்களை தியாகம் செய்தார். டீன் சேலஞ்ச், சிறை அமைச்சகம் மற்றும் பெரும்பாலான முதியோர் இல்லங்கள் மூலம் ஊழியம் செய்வதை அவர் விரும்பி செய்தார். பல ஆண்டுகளாக எனது பெற்றோர் முதியோர் இல்லங்களுக்கு மாதந்தோறும் சென்று முதியோர்களுக்கான சேவைகளை நடத்தி வந்தனர். நோயாளிகளின் தனி அறைகளுக்குச் சென்று அவர்களுக்கு பரிசுகளை வழங்குவார். கீபோர்டு வாசித்து அவர்களுக்காகப் பாடுவார், மறக்கப்பட்ட பழைய புனிதர்களை ஊக்குவிக்க என் அப்பா பல பிரசங்கங்களை செய்வார்கள்.



## அம்மாவின் இறுதி வருடங்கள்

என் அம்மாவின் இறுதி ஆண்டுகளில், குறிப்பாக உடல்நலப் பிரச்சினைகளுடன் போராடும் போது, அவர் தனது பெரும்பாலான நேரத்தை பிரார்த்தனைகளுக்காக செலவு செய்தார். காரில் வெவ்வேறு ஊர்களுக்குப் பயணம் செய்து, காரில் அமர்ந்தோ அல்லது வாக்கருடன் இறங்கி பூங்காவில் அமர்ந்தோ, இறுதி காலங்களில் ஆன்மாக்களை அறுவடை செய்யும் நோக்கில் பிரார்த்தனை செய்தார். கடந்த வருடத்தில் தன் குடும்பத்திற்காக பிரார்த்தனை செய்வதாக எண்ணற்ற முறை என்னிடம் சொன்னார்கள்.

கடைசி மாதங்களில் பேரக்குழந்தைகளுக்காக ஏக்கம் கொண்டு அதிகாலையில் எழுந்து அவர்களுக்காக ஜெபம் செய்வார். இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு கொள்ளுபேத்தியை (எங்கள் பேத்தி) குடும்பத்தில் வரவேற்றார். அவர் என் வாழ்நாள் முழுவதும் எனக்காக உண்மையாக ஜெபித்ததைப் போலவே, எங்கள் புதிய குடும்ப உறுப்பினருக்காகவும் ஜெபம் செய்ய ஆரம்பித்தார்.

கடந்த ஆண்டு அல்லது அதற்கு சில மாதங்களுக்கு முன்பு இறுதி நேர மறுமலர்ச்சியைப் பற்றி அம்மா நிறைய பேசினார். கடவுளின் புனித கிருபையால் தேவாலயத்திற்குள் தங்களை முழுமையாக இயேசுவிடம் ஒப்படைக்கும் மக்களைப் பற்றி அவர் பேசினார். நேரம் குறைவாக இருப்பதாக உணர்ந்தார், தேவனுடைய வருகைக்கு நாம் தயாராக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

என் அன்பான அம்மாவின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைக் கொண்டு ஒரு புத்தகத்தையே எழுத முடியும், நான் இன்னும் நிறைய எழுதலாம் ஆனால் என் அம்மாவுக்கான இந்த அஞ்சலியை நான் விரைவில் முடிக்க வேண்டும். எலிசபெத் ஏ போர்ட்டரின் வாழ்க்கை பக்தி, பிரார்த்தனை, விசுவாசம் மற்றும் நிபந்தனையற்ற அன்பு உள்ளிட்ட பல அழகான குணங்கள் நிரம்பியது. அவருடைய கதை கிறிஸ்துவை நம்புபவர்கள் பலரை தங்கள் வாழ்க்கைப் பந்தயத்தில் சரியாக ஓட வைக்கும். உங்கள் வாழ்க்கை முக்கியமானது என்பதால் நீங்கள்

எதிர்கொள்ளும் எந்த தடைகளையும் கடந்து செல்லுங்கள். நீங்கள் வாழ ஒரே ஒரு வாழ்க்கை மட்டுமே உள்ளது. கர்த்தர் உங்கள் வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். உங்கள் வாழ்க்கைக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது. நீங்கள் மிகவும் வயதாகிவிட்டதாக உணர்ந்தாலும் இன்னும் பல காலம் மிச்சமிருக்கிறது, கடவுளின் மீதான நம்பிக்கையை மட்டும் கைவிட வேண்டாம்.

என் அம்மா தனது வாழ்நாளில் பல தடைகளை கடக்க வேண்டியிருந்தது, ஆனால் கடைசி வரை தனது வாழ்க்கைப்பந்தயத்தில் ஓடிக்கொண்டே இருந்தார். மேலும் அவர் தனது முழு குடும்பத்திற்கும் ஒரு மதிப்புமிக்க ஆன்மீக பாரம்பரியத்தை விட்டுச் சென்றார். ஜெபித்த பிரார்த்தனை விதைகள் அவர் வாயை விட்டு வெளியேறியிருக்கலாம், ஆனால் அவை நம் வாழ்க்கையை விட்டு ஒருபோதும் வெளியேறாது. கர்த்தர் ஒரு சிறிய அமிஷ் பெண்ணை எடுத்து, அவளைக் காப்பாற்றி, பரிசுத்த ஆவியால் நிரப்பி அவரை, அன்பிற்கும் பிரார்த்தனைக்குமான ஒரு எளிமையான கருவியாக மாற்றினார். என் அம்மாவின் பிரசங்கங்கள் முதல் அவரது சக்திவாய்ந்த பிரார்த்தனைகள் வரை, அவரது அன்பான மற்றும் கருணையான செயல்கள் என்றும் நினைவுகூரப்படுவார்.

ஒவ்வொரு வருடமும் நான் அவருடன் தனியாக மூன்று நாட்கள் கழிப்பேன். எங்கள் குடும்பத்திற்கு மிகவும் பிடித்த அனைத்து இடங்களுக்கும் நாங்கள் சென்றிருக்கிறோம். நாங்கள் வாழ்ந்த இடங்கள், எனது தாத்தா பாட்டியின் கல்லறைகள் மற்றும் எங்கள் குடும்பம் மற்றும் அமிஷ் வரலாறு தொடர்பான இடங்கள் போன்ற பல இடங்களுக்கு சென்றிருக்கிறோம். ஆண்டு முழுவதும் இந்த நேரத்தை எதிர்பார்த்து காத்திருப்பேன். அந்த நாட்கள் தான் என் அம்மா முழுக்க எனக்காக செலவிட்ட நாட்கள். நான் அவளுடன் பரலோகத்தில் சேரும் நாள் வரை, நான் மனதில் வைத்திருக்கும் படியான நினைவுகளை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். எங்கள் தொலைபேசி அழைப்புகள் மற்றும் சந்திப்புகளை நினைத்து நான் மிகவும் ஏங்குவேன். என் அம்மா

எப்பொழுதும் ஒரு தொலைபேசி அழைப்பு தூரத்தில் தான் இருப்பார். என் தாயின் கல்லறைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் அவர்களுடைய சொற்கள்: "சிறந்தது இன்னும் வரவில்லை," இது எவ்வளவு பெரிய உண்மை இல்லையா? ஆனால் இப்போது தான் அதன் அர்த்தங்களின் ஆழம் எனக்கு நன்றாகப் புரிகிறது. இயேசுவை தனிப்பட்ட இரட்சகராக உணர்ந்தால், நம் அன்புக்குரியவர்களை மீண்டும் காண்போம். பரலோகத்தில் நம் குடும்பங்களும் நமக்காகக் காத்திருக்கின்றன. அதுவரை, “தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருங்கள்” என்ற மற்றொரு வாசகத்தை என் அம்மா பலமுறை சொல்வார். இவை அவரது அப்பாவிடம் இருந்து அவர் இரவல் பெற்ற சொற்கள்.

அவர் இறப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு நான் அவருடன் தொலைபேசியில் பேசினேன். அன்று மாலை அவர்களை அழைக்க வேண்டுமென்ற தூண்டுதலை நான் உணர்ந்தேன். நாங்கள் விடைபெறுவதற்கு முன்பு நான் சொன்ன கடைசி மூன்று வார்த்தைகள் "நான் உன்னை நேசிக்கிறேன்" என்பது தான், அவரும் விரைவாக பதிலளித்தார், "நானும் உன்னை நேசிக்கிறேன்."

*நமது அம்மாக்களின் விசுவாசம், நிலையான விசுவாசம்!*
*நாம் சாகும் வரையில் கர்த்தரில் விசுவாசமாக இருப்போம்.*

**ஸ்டீவ் போர்டர்**

***Refuge Ministries***

Email: G524walk@yahoo.com

Website: www.findrefuge.tv

ஸ்டீவ் மற்றும் அவரது மனைவி டயான் ஆகியோர் அகதிகள் அமைச்சகம் மற்றும் டீப்பர் லைஃப் பிரஸ் என்ற பிரெசன்ஸ் டிரைவன் வெளியீட்டு நிறுவனத்தை நிறுவினர். ஆவியின் ஆழமான உண்மைகளை வெளிக்கொணர அவரிடம் சிறப்பு திறமைகள் உள்ளது,

இது தெளிவு மற்றும் எளிமையுடன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் ஒருவர் நெருங்கி நடக்கவும், ஆழமான உறவையும் ஏற்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது. ஸ்டீவ் எலியா லிஸ்ட், ஸ்பிரிட் ஃப்யூயல் மற்றும் ஐடெண்டிட்டி நெட்வொர்க் உட்பட பல தீர்க்கதரிசன வெளியீடுகளுக்கு தொடர்ந்து பங்களிப்பவர். ஸ்டீவின் புத்தகங்கள், பிரசுரங்கள், கட்டுரைகள் மற்றும் வீடியோக்கள் உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற மனிதர்களை சென்றடைந்துள்ளன. இவர்கள் ரோசெஸ்டர், நியூயார்க் அருகே வசிக்கின்றனர்.